
## மகாராஜ் திரைப்படமும் எதிர்ப்பும்!




‘கோயில் கூடாது என்று சொல்லவில்லை; கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகக்கூடாது என்றுதான் சொல்கிறோம்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் 1952-இல் ‘பராசக்தி’ திரைப்படத்தில் வசனம் எழுதினார். ‘பராசக்தி’ வெளியாகி அரை நூற்றாண்டு கழிந்துதான் பகுத்தறிவு, சாதி எதிர்ப்பு, பெண்ணுரிமை ஆகியவற்றை மையப்படுத்திய திரைப்படங்கள் பாலிவுட்டில் வெளியாகின்றன. அந்த வகையில் பி.கே, ஓ.எம்.ஜி (ஓ மை காட்), ஆர்ட்டிக்கிள்-15, ஷியாம் சிங்கா ராய், லாபதா லேடீஸ் திரைப்படங்கள் வரிசையில் சேர்கிறது, சமீபத்தில் நெட்பிளிக்ஸ் தளத்தில் வெளியாகியுள்ள ’மகாராஜ்’ திரைப்படம்.

18-ஆம் நூற்றாண்டில் மும்பையில் வாழ்ந்த ஜேஜே மகாராஜ் என்ற சாமியார், ‘தான் கிருஷ்ணரின் சந்ததி’ என்று சொல்லிக்கொண்டு, பெண்களைப் பாலியல் ரீதியில் சுரண்டுகிறார். ‘பாத சேவை’ என்ற பெயரில் நடைபெறும் இந்தப் பாலியல் சுரண்டலை, வேடிக்கை பார்க்கவும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதை எதிர்த்து, தன் பத்திரிகையில் எழுதும் கர்சன்தாஸ் என்ற இளைஞர்மீது மகாராஜ் தொடுக்கும் அவதூறு வழக்கைச் சுற்றிக் கதை பின்னப்பட்டுள்ளது.

மதத்தின் பெயரிலான மோசடிகளைத் தோலுரிக்கும் இந்தப் படத்தில் கர்சன் தாஸ் பாத்திரத்தில் அமீர்கான் மகன் ஜுனைத் கான் நடித்ததற்காக வழக்கம்போல் இந்துத்துவவாதிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இத்தனைக்கும் கர்சன்தாஸ் கதாபாத்திரம் இந்துமத சாஸ்திரங்களை ஏற்றுக்கொண்டு தன்னை ‘ஒரு வைணவ பிராமணர்’ என்று முன்னிறுத்தித்தான் இந்த விமர்சனங்களை முன்வைக்கிறது. ஆனாலும், இந்துத்துவவாதிகள் எதிர்ப்பு தெரிவிப்பதில் இருந்தே ‘மகாராஜ்’ படத்தின் அரசியல் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞருடன் கலந்துரையாடல்!



ந.இராமசாமி

1981-ஆம் ஆண்டு கலைஞர் அவர்களை, பெங்களூர் பொதுக் கூட்டத்திற்கு அழைத்து, உட்லண்ட்ஸ் ஓட்டலில் தங்க வைத்திருந்தோம். அன்றைய மாநில தி.மு.க துணை அமைப்பாளர் என்ற முறையில், அன்று காலை ஓட்டலில் கலைஞர் அவர்களைச் சந்திக்க, கர்நாடகா மாநில தொ.மு.ச. பேரவை நிர்வாகிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள் கலைஞர் அவர்களைச் சந்தித்து, கலந்துரையாடிய பிறகு நாங்கள் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. உடன் தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் அமலநாதன், வி.சிவசங்கர், இரா.நாமதேவ், எஸ்.நவாப், ப.சுப்பிரமணியன், இராஜகோபால், சி.முனிரத்தினம் மற்றும் பேரவை உறுப்பினர்கள் உடனுள்ளனர்.

– ந.இராமசாமி, மாநில தி.மு.க அமைப்பாளர், கர்நாடகா.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### “கட்சி என்றால் கொள்கை வேண்டும்!”

1960-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் சென்னை, மயிலாப்பூரில் பேரறிஞர் அண்ணா உரையாற்றிய பொதுக்கூட்டம். கட்சிகள் குறித்து பேசுகையில், “கட்சி என்றால் கொள்கை வேண்டும் இதை நான் சொல்வதாலே புதிது புதிதாகக் கட்சிகளைப் பெரும் பணத்தைச் செலவழித்து ஏற்படுத்துவதை நான் குறை சொல்லுகிறேன் என்று கருத வேண்டாம். ஒரு அரசியல் கட்சிக்கு முதல் அடிப்படைத் தேவை, கொள்கை. கொள்கை இல்லாமல் இருக்கும் கட்சியை நடத்திச் செல்கிறவர்கள் மட்டுமல்ல-அதைக் கூர்ந்து பார்க்கிற மக்களும் ஆதரிக்கமாட்டார்கள்” என்கிற விளக்கம் காலத்தால் நிலைத்து நிற்கிறது.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **18**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

# பெயர் மாற்றம் பயன் தருமா?



*தற்போதைய மேற்கு வங்காளத்தில், 60 சாதிகள் பட்டியலின அட்டவணையில் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் ‘ராஜ்பன்ஷி’ (18.4%), ‘நாம சூத்திரர்கள்’ (17.4%), ‘பாக்தி’ (15%) ஆகிய மூன்று சாதிகள் 2011-ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இந்து சமூகப் படிநிலையில் கீழடுக்கில் வைக்கப்பட்டிருந்த ‘கோச்’ (KOCH) என்றழைக்கப்பட்ட வங்காளத்தைச் சேர்ந்த பூர்வகுடிமக்கள், தங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் சாதிய இழிவை நீக்குவதற்காக, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். அதன் ஒருபகுதியாக, 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தங்களை ராஜ்பன்ஷி (ஆண்ட பரம்பரை) என்று அழைத்துக்கொண்டனர்.*

*அதன்பின்னர், 1891-இல், ஷத்ரியர்கள் என்று நிறுவ, பங்கா ஷத்ரியர்கள் என்ற புதிய பெயர் சூட்டிக்கொண்டனர். ஹரிமோகன் ரே நிறுவிய ‘ரங்பூர் ப்ரத்ய ஷத்ரிய ஜாதிர் உன்னதி பிதாயானி சபா’ எனும் அமைப்பு இதற்கான முன்னெடுப்புகளைச் செய்தது. ‘காளிகா புராணம்’, ‘யோகினி தந்திரம்’ போன்றவற்றிலிருந்து ஆதாரங்களைக் காட்டி ஷத்ரிய வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் என நிறுவ முயன்றனர். ஆனால், அவர்களின் முயற்சி எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.*

*ராஜ்பன்ஷி ஷத்ரியர் என்ற புதிய அடையாளத்தைக் கோரி, 1910-இல் ‘ஷத்ரிய சமிதி’யை நிறுவிய ‘பஞ்சனன் பர்மா’, ராஜ்பன்ஷிகளை கோச் சமூகத்திலிருந்து பிரித்தெடுத்து, மிதிலா, ரங்பூர், கம்ரூப் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பிராமண பண்டிதர்களிடமிருந்து அங்கீகாரம் பெற்று, ஷத்ரிய அந்தஸ்து பெறுவதில் வெற்றிபெற்றார். ராஜ்பன்ஷிகள் தங்களை ஆரிய வம்சத்தினர் என்று அழைத்துக் கொண்டதோடு, சமஸ்கிருதமயமாக்கலிலும் கவனம் செலுத்தினர். தங்களை இருபிறப்பாளர்களாக் கருதிக்கொண்டனர்.*

*கரடோயா நதியில் நீராடி பூணூல் அணிந்து கொண்டனர். குழந்தைகளுக்கு உபநயனம் செய்தனர். சர்க்கார், கோஷ், தாஸ், மண்டல் போன்ற சாதியப் பின்னொட்டுக்களைக் கைவிட்டு, ராய், ரே, பர்மன், சின்ஹா, அதிகாரி போன்ற பின்னொட்டுக்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். இவர்கள் எடுத்த முயற்சிகள் அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தப் பயன் பட்டனவா?*

**சமூகப் பொருளாதார நிலை பலபெயர் மாற்றங்களுக்குப் பின்னரும் சற்றும் மாற்றமில்லாமல் தொடர்ந்தது.**

*1911-இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பதிலளிக்கிறது. அக்கணக்கெடுப்பின்படி, 1,000 பேரில் 51 பேர் மட்டுமே ராஜ்பன்ஷி சாதியில் கல்வியறிவு பெற்றிருந்தனர். பைத்யா (532) எனும் ஆதிக்கச்சாதியினரை ஒப்பிடுகையில், பத்தில் ஒரு மடங்கு ராஜ்பன்ஷி சாதியினர் மட்டுமே கல்வியறிவு பெற்றிருந்தனர். 10,000 பேரில் 8 பேர் மட்டுமே ஆங்கிலக் கல்வியறிவு பெற்றிருந்தனர். இவர்களை ஒப்பிடுகையில், வங்காளத்தின் இன்னொரு பட்டியலினப் பிரிவான நாம சூத்திரர்கள் 22 பேர் ஆங்கிலத்தில் கல்வியறிவு பெற்றிருந்தனர்.*

*1921, 1931-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது, ராஜ்பன்ஷி என்ற பெயருக்குப் பதிலாக ஷத்ரியர் என்ற பெயரை மட்டுமே பயன்படுத்துமாறு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரிகளிடம் முறையிட்டனர். கோச் எனும் பெயரிலிருந்து ராஜ்பன்ஷி, ராஜ்பன்ஷியிலிருந்து பங்கா ராஜ்பன்ஷி, பங்கா ராஜ்பன்ஷியிலிருந்து ராஜ்பன்ஷி ஷத்ரியா, ராஜ்பன்ஷி ஷத்ரியரிலிருந்து ஷத்ரியர் எனும் புதுப்புது பெயர்களுக்கு மாறினாலும், சமூகத்தில் அவர்களின் நிலையில் உண்மையான மாற்றம் ஏற்படவில்லை. கோச் என்று அழைக்கப்பட்டபோது இருந்த சமூகப் பொருளாதார நிலை பலபெயர் மாற்றங்களுக்குப் பின்னரும் சற்றும் மாற்றமில்லாமல் தொடர்ந்தது. சமூகப் பொருளாதார நிலையை மாற்ற என்ன செய்ய வேண்டும்?*


**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

ர.பிரகாசு **18**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# தடம் பதித்த விருதுநகர்!




*பணி, கல்வி நிமித்தமாக நள்ளிரவில் ரயில் மற்றும் பேருந்து நிலையம் செல்லும் பெண்கள், பாதுகாப்புடன் தங்கக்கூடிய விடுதிகளை அமைக்க, உத்தரவிட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டது. 28.06.2024 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, “வெளியூர் செல்லும் பெண்கள் வசதிக்காக, மாநிலம் முழுதும் 2,028 தங்கிச் செல்லும் விடுதிகளும், முக்கிய நகரங்களில் பணிபுரியும் பெண்களுக்காக 11 இடங்களில் ‘தோழி’ விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன” என தமிழ்நாடு அரசு பட்டியலிட்டதைப் பாராட்டி, வழக்கை முடித்து வைத்திருக்கிறது, சென்னை உயர்நீதிமன்றம். இந்த நடவடிக்கைகள்தான் திராவிட மாடலின் சிந்தனை உணர்வு.*

*இது, இன்று புதிதாகப் பிறந்த உணர்வல்ல. நூற்றாண்டைக் காணும் சுயமரியாதை இயக்கத்தின் ஆதியில் உதித்த கருத்துகள் என்பதற்குச் சான்றாக இருக்கிறது, 1931-ஆம் ஆண்டில் நடைபெற்ற விருதுநகர் ‘சுயமரியாதை மாநாடு’. ஜூன் 8, 9 ஆகிய தேதிகளில் நடைபெற்ற 2-வது சுயமரியாதை மாநாட்டுடன் 2-வது பெண்கள் மாநாடு, 3-வது வாலிபர் மாநாடும் நடைபெற்றன. பெண்கள் மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்று, “ரயில் நிலையங்களில் பெண்களுக்கு தங்கும் அறைகள் தனியாக ஒதுக்கப்பட வேண்டும்” என்பது. தனித்துவமான தமிழ்நாட்டுக்காக நூறாண்டாகச் சிந்தித்துச் செயல்படுகிறது திராவிட இயக்கம் என்பதற்கு இது மேலுமொரு சான்று.*

**நூற்றாண்டில் திராவிட இயக்கம் போட்ட தடம் தமிழர்களைத் தலைநிமிரச் செய்திருக்கிறது. தமிழ்நாட்டை தன்னிகரற்றதாக்கி இருக்கிறது.**

*விருதுநகர் சுயமரியாதை மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டியன் நியமிக்கப்பட்டிருந்தார். பொருளாதார அறிஞரான ஆர்.கே.சண்முகம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். 15 ஆயிரம் பேர் பங்கேற்ற பிரமாண்ட ஊர்வலத்துடன் மாநாடு தொடங்கியது. இரண்டு யானைகள் ஊர்வலத்தில் வந்தன. 6 குதிரைகள் பூட்டிய ரதத்தில் தலைவர்கள் ஊர்வலமாக வந்தனர். மிகப்பெரிய மைதானத்தில் 5 ஏக்கர் சுற்றளவில் அடைப்புத் தட்டிகள் போடப்பட்டு மாநாட்டுப் பந்தல் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கடைகளும், பதாகைகளும் மாநாட்டுப் பந்தலுக்கு உற்சாகமூட்டின.*

*மாநாட்டு அரங்கின் நடுவே ஒருபக்கம் பனகல் அரசர் படமும், இன்னொரு பக்கம் பெரியாரின் படமும் பெரிதாக வைக்கப்பட்டிருந்தன. “தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும், பாகுபாட்டைக் கற்பிக்கும் வர்ணாசிரமக் கொள்கை ஒழிக்கப்பட வேண்டும், இந்தியைத் திணிப்பது, வர்ணாசிரமத்தைத் திணிப்பதாகும், பெண்களுக்குச் சொத்துரிமை, திருமண உரிமை, விவாகரத்து உரிமை வேண்டும்” என்பன போன்ற பல புரட்சிகரமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பட்டுக்கோட்டை அழகிரி, எஸ்.இராமநாதன், ப.ஜீவானந்தம் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றதாக குடிஅரசு ஏட்டில் செய்திகள் பதிவாகி உள்ளன.*


*பெண்கள் மாநாட்டில், 3,000 பெண்களும், வாலிபர் மாநாட்டில் 2,000 இளைஞர்களும் பங்கேற்றனர். “30 வயதுவரை பெண்கள் படிக்க வேண்டும், பெண்களை ஆசிரியர், மருத்துவத்தொழிலுக்கு மட்டும் எடுக்காமல் காவல்துறை, இராணுவத்திலும் வேலைக்குச் சேர்க்கவேண்டும்” என்ற தீர்மானங்கள் பெண்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. 1973-இல் பெண் காவலர்களைப் பணியில் இணைத்தார் கலைஞர். 1989-இல் பெண்களுக்கு சொத்துரிமையும் வழங்கிவிட்டார். இராணுவத்தில் பெண்கள் மிடுக்கோடு வீரநடைபோடுகின்றனர். நூற்றாண்டில் திராவிட இயக்கம் போட்ட தடம் தமிழர்களைத் தலைநிமிரச் செய்திருக்கிறது. தமிழ்நாட்டை தன்னிகரற்றதாக்கி இருக்கிறது.*

**...கூட்டம் திரளும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**527**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131